**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: CC No.02/2013**
**Deposition of witness for prosecution –PW–2**

| | | |
|---|---|---|
| Name | : | பரணீஸ்வரி |
| F/H Name | : | நாகராஜன் |
| Village | : | இராமநாதபுரம் |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | ஆசிரியை |
| Religion | : | |
| Age | : | 48 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central act 44 of 1969) on the 16th day of March 2026.

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து இராமநாதபுரம் அரசு மாதிரி பள்ளியில் ஆசிரியையாகபணி புரிந்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர். 23.07.2012 ம் தேதி அப்போது எனது கணவர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அலுவலக உதவியாளராக பணி புரிந்ததால் அவர் வேலைக்கு நீதிமன்ற பணிக்கு வந்துவிட்டார். நான் கடலாடி ஊரக வளர்ச்சி துறையில் வேலை பார்த்தால் பணிக்கு சென்றுவிட்டேன். நானும் என் கணவரும் பணி முடித்து மாலை 06.30 மணிக்கு வீட்டிற்கு சென்றோம். எனக்கு 2 பெண் குழந்தைகள். அவர்கள் டியூசன் செல்வதற்காக அருகில் உள்ள வீட்டில் இருந்தார்கள். 06.30 மணிக்கு எனது கணவர் வீட்டில் பார்த்தபோது வராண்டாவில் வெள்ளி டம்ளர் பையோடு கீழே கிடந்தது. நான் பீரோவில் வைத்திருந்தேன். அது எப்படி இங்கு வந்தது என்று பார்த்தபோது 09.00 மணிக்கு எனது குழந்தைகள் டியூசன் முடித்து வந்தார்கள். அவர்களிடம் கேட்ட போது தாத்தா வந்தததாக சொன்னார்கள். எந்த தாத்தா என்று கேட்டேன். எனக்கு மாமா என்று சொன்னதாக சொன்னார். அதற்கு முன்பு

எனது பீரோவை திறந்து பார்த்தேன். அப்போது எனது நகைகளை பீரோவின் ரகசிய அறையில் பாலிதீன் பையில் நகைகளை வைத்திருந்தேன். அதை காணவில்லை. அதில் அந்த வெள்ளி டம்ளர் வெளியில் வந்து கிடந்தது. அப்போது என் குழந்தைகளிடம் கேட்ட போது மாலை 04.00 மணியை போல வயதான தாத்தா ஒருவர் வெள்ளை மீசை வெள்ளை முடியுடன் வந்ததாக சொன்னார். அப்போது அவர் குழந்தைகளிடம் தண்ணீர் கேட்டதாகவும் கூலிங் வாட்டர் வேண்டும் என்று கேட்டவுடன் கூலிங் வாட்டர் குடிக்க கூடாது என்று எனது அப்பா சொல்லி உள்ளதாக எனது மகள் சொல்லி உள்ளார். எனது மகளிடம் அந்த நபர் காசு கொடுத்து கடையில் கூலிங் வாட்டர், பாக்கும் வாங்கி வர சொல்லி உள்ளார். எனது மகள் கடையில் அதை வாங்கி வந்து கொடுத்துள்ளார். எனது மகள் கடைக்கு சென்ற உடன் பீரோ மேலே உள்ள சாவியை எடுத்து பீரோவை திறந்து அதில் உள்ள நகைகளை எடுத்து சென்றுள்ளார். எனது மகள் அவர் எனது உறவினர் என்றும் எனது அம்மாவிற்கு மாமா என்றும் சொல்லி உள்ளார். அதனால் அந்த நபர் வீட்டிற்கு வந்துள்ளார். எனது நகைகள் 9 பவுன் திருடு போய் இருந்தது. எனது வளையல் இரண்டு 3 பவுன், எனது குழந்தையின் வளையல் 1 ½ பவுன், ஒரு தோடு செட்டு ½ பவுன், எனது சிறிய குழந்தையின் கைசெயின் ½ பவுன், எனது மனைவியின் கல் நெக்லஸ் 3 ½ பவுன், எனது குழந்தையின் கொலுசு 1 ஜோடி, பணம் ரூ.1,000/- ஆகியவை திருடு போயிருந்தது. மொத்தம் 9 பவுன். அருகில் விசாரணை செய்து பார்த்தேன். அதன்பிறகு காவல் நிலையத்தில் எனது கணவர் புகார் கொடுத்தார். அதன்பிறகு போலீசார் கைரேகை நிபுணருடன் வந்து சோதனை செய்தார்கள். அதன்பிறகு போலீசார் எதிரியை பிடித்து விட்டதாக சொல்லி குழந்தையிடம் புகைப்படத்தை காண்பித்தார்கள் எனது மகள் எதிரியை அடையாளம் காட்டினார். திருடு போன நகைகளை நான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெற்றுக்கொண்டோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு கு.வி

இல்லை

மறு விசாரணை

இல்லை.

(ஒப்பம்/- N. நிலவேஸ்வரன்)
நீதித்துறை நடுவர் எண்.1,
இராமநாதபுரம்.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XX III Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1**
**RAMANATHAPURAM**
**CASE NO: CC No.02/2013**
**Deposition of witness for prosecution –PW–1**

| | | |
|---|---|---|
| Name | : | நாகராஜன் |
| F/H Name | : | கோவிந்தன் |
| Village | : | இராமநாதபுரம் |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | கால்நடை துறை |
| Religion | : | |
| Age | : | 58 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central act 44 of 1969) on the 16th day of March 2026.

**முதல் விசாரணை:**

நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து கால்நடை பராமரிப்பு துறையில் உதவியாளராக பணி புரிந்து வருகிறேன். 23.07.2012ம் தேதி அப்போது நான் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அலுவலக உதவியாளராக பணி புரிந்ததால் நான் வேலைக்கு நீதிமன்ற பணிக்கு வந்துவிட்டேன். எனது மனைவி கடலாடி ஊரக வளர்ச்சி துறையில் வேலை பார்த்தால் பணிக்கு சென்றுவிட்டார். நா்னும் என் மனைவியும் பணி முடித்து மாலை 06.30 மணிக்கு வீட்டிற்கு சென்றேன். எனக்கு 2 பெண் குழந்தைகள். அவர்கள் டியூசன் செல்வதற்காக அருகில் உள்ள வீட்டில் இருந்தார்கள். 06.30 மணிக்கு நான் வீட்டில் பார்த்தபோது வராண்டாவில் வெள்ளி டம்ளர் பையோடு கீழே கிடந்தது. நான் பீரோவில் வைத்திருந்தேன். அது எப்படி இங்கு வந்தது என்று பார்த்தபோது 09.00 மணிக்கு எனது குழந்தைகள் டியூசன் முடித்து வந்தார்கள். அவர்களிடம் கேட்டேன். அதற்கு முன்பு எனது பீரோவை திறந்து பார்த்தேன். அப்போது எனது நகைகளை பீரோவின் ரகசிய அறையில் பாலிதீன் பையில் நகைகளை வைத்திருந்தேன். அதை காணவில்லை. அதில் அந்த வெள்ளி டம்ளர் வெளியில் வந்து கிடந்தது. அப்போது என் குழந்தைகளிடம் கேட்ட போது மாலை 04.00

மணியை போல வயதான தாத்தா ஒருவர் வெள்ளை மீசை வெள்ளை முடியுடன் வந்ததாக சொன்னார். அப்போது அவர் குழந்தைகளிடம் தண்ணீர் கேட்டதாகவும் கூலிங் வாட்டர் வேண்டும் என்று கேட்டவுடன் கூலிங் வாட்டர் குடிக்க கூடாது என்று எனது அப்பா சொல்லி உள்ளதாக எனது மகள் சொல்லி உள்ளார். எனது மகளிடம் அந்த நபர் காசு கொடுத்து கடையில் கூலிங் வாட்டர், பாக்கும் வாங்கி வர சொல்லி உள்ளார். எனது மகள் கடையில் அதை வாங்கி வந்து கொடுத்துள்ளார். எனது மகள் கடைக்கு சென்ற உடன் பீரோ மேலே உள்ள சாவியை எடுத்து பீரோவை திறந்து அதில் உள்ள நகைகளை எடுத்து சென்றுள்ளார். எனது மகள் அவர் எனது உறவினர் என்றும் எனது அம்மாவிற்கு மாமா என்றும் சொல்லி உள்ளார். அதனால் அந்த நபர் வீட்டிற்கு வந்துள்ளார். எனது நகைகள் எனது மனைவியின் வளையல் இரண்டு 3 பவுன், எனது குழந்தையின் வளையல் 1 ½ பவுன், ஒரு தோடு செட்டு ½ பவுன், எனது சிறிய குழந்தையின் கைசெயின் ½ பவுன், எனது மனைவியின் கல் நெக்லஸ் 3 ½ பவுன், எனது குழந்தையின் கொலுசு 1 ஜோடி, பணம் ரூ.1,000/– ஆகியவை திருடு போயிருந்தது. மொத்தம் 9 பவுன். அருகில் விசாரணை செய்து பார்த்தேன். அதன்பிறகு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் தான் அது அந்த புகார் **அ.சா.ஆ.1** ஆகும். அதன்பிறகு போலீசார் எதிரியை பிடித்து விட்டதாக சொல்லி குழந்தையிடம் புகைப்படத்தை காண்பித்தார்கள் எனது மகள் எதிரியை அடையாளம் காட்டினார். திருடு போன நகைகளை நான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெற்றுக்கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு கு.வி

இல்லை

மறு விசாரணை

இல்லை

(ஒப்பம்/– N. நிலவேஸ்வரன்)
நீதித்துறை நடுவர் எண்.1,
இராமநாதபுரம்.